**Vol. 6, Issue – 2** **Pg. No. 08 - 10**

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்கால செப்புப் பட்டயம்

முனைவர் ஆ.பிரபு,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி,
திருப்பத்தூர்.
aprabu@shctpt.edu

==========================================================

முன்னுரை:

திருப்பத்தூர் மாவட்டத்தில் அகரம் என்ற ஊரில் மேற்கொண்ட ஆய்வில் அங்குள்ள லட்சுமி நாராயணசுவாமி திருக்கோவில் தர்மகர்த்தா பலராமன் என்பவரிடம் செப்புப்பட்டயம் இருப்பதாகத் தெரிவித்தார். அச்செப்புப் பட்டயத்தினைப் பெற்று சுத்தம் செய்து படித்தபோது, அப்பட்டயம் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் காலத்தையது என்பதை அறியமுடிந்தது. பட்டயத்தில் இவரது மெய்க்கீர்த்தி சிறப்பாக விவரிக்கப்பட்டுள்ளது.

அமைப்பு:

செப்புப்பட்டயமானது 615கிராம் எடையோடு, 36 செ.மீ நீளமும், 23.5 செ.மீ அகலமும் கொண்டதாக உள்ளது. இரண்டு பகுதிகளாக உள்ள இதனை துளையிட்டு வளையங்களால் இணைத்துள்ளனர். மேற்புறம் அழகிய வேலைப்பாடுகளுடன் அலங்கரிக்கப்பட்டு, சூரியன், பிறைச்சந்திரன் சாட்சியங்களாகவும், அதன் கீழே வலதுபுறம் விநாயகர், இடது புறம் காளை உருவமும் நடுவே சிவ லிங்கமும் வரையப்பட்டுள்ளன. இவற்றின் கீழே "சிவன்துணை ஸ்ரீஅருணாத்திரி யீஸ்வரர் சாதனப் பட்டயம்" என்று தொடங்கி 46 வரிகள் எழுதப்பட்டுள்ளன.

செய்தி:

கி.பி. 1515ஆம் ஆண்டு எழுதப்பட்ட இப்பட்டயம் திருவண்ணாமலை 'தனியூர்' தகுதி பெற்றிருந்ததை விளக்குகின்றது. தொண்டை மண்டலத்தில் உள்ள 24 கோட்டங்கள், 79 வளநாடுகளில் வாழும் பெரியநாட்டவர்கள் எனப்படும் சைவ வேளாளர்கள் இணைந்து திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் திருக்கல்யாணத்திற்கும் அங்குள்ள சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் நந்தவனப் பராமரிப்புக்கும் நன்கொடை வழங்கியதை அறிவிக்கின்றது. இதனைப் பாதுகாப்பவருக்கு வாக்கு சகாயம், சரீர சகாயம், அறத்த சகாயம் கிடைப்பதோடு; கோதானம், பூதானம், கன்னிகாதானம், அன்னதானம், சொர்னதானம், வலைத்திரதானம் பெறக்கடவது என்று எழுதப்பட்டுள்ளது.

இதற்குத் தீங்கு விளைவிப்போர் பசுவைக்கொன்ற, சிசுவைக் கொன்ற தோஷத்தையும் பிரம்மஹத்தி தோஷத்தையும் பெறுவார்கள் என விவரிக்கப்பட்டுள்ளது. தொண்டை மண்டலமானது 24 கோட்டங்களை உள்ளடக்கியது என விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அவை, புழல் கோட்டம் ,புலியனூர்

கோட்டம், மடியகாட்டுக் கோட்டம், மண்ணூர் கோட்டம், செங்காடுக் கோட்டம், பயனூர் கோட்டம், எயில் கோட்டம், தாமல் கோட்டம், ஊத்துக்காட்டு கோட்டம், களத்தூர் கோட்டம், செம்மூர் கோட்டம், இத்தூர் கோட்டம், ஆமூர் கோட்டம் வெங்குணக் கோட்டம், பல் குணக்கோட்டம், இளங்காட்டுக் கோட்டம், காளியூர் கோட்டம், சிறுகனார் கோட்டம், படூர் கோட்டம், கடிகைக் கோட்டம், செந்தீரக் கோட்டம், குணபத்திரக் கோட்டம், வேங்கிடக் கோட்டம், வேலூர் கோட்டம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

அரிய வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய இச்செப்புப்பட்டயம் தொண்டைமண்டல வரலாற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

***கள ஆய்வு : முனைவர் ஆ.பிரபு***

***களம் : அகரம், திருப்பத்தூர் மாவட்டம்.***

***தகவல் அளித்தவர் : திரு. பலராமன்***